முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2024 யூலை

## (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

(Financial Controls & Audit)

2024-08-10
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 07
வினாக்கள் : 09

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் ஏதேனும் எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

***திசேரா அன்ட் கம்பனி*** என்பது ***நியூட்ரல் பீஎல்சீ*** இனால் புதிதாக நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் ஆகும். கணக்காய்வுக் குழுவுடனான முதலாவது சந்திப்பில், கணக்காய்வுக் குழுவின் தலைவர், கணக்காய்வாளரின் “செயன்முகமை வகிபாகம் (stewardship role)” பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

***நீங்கள் செய்ய வேண்டியது :***

***நியூட்ரல் பீஎல்சீ*** இன் பங்குதாரர்களுக்கு கணக்காய்வு ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

### வினா 02

**“anything.lk”** என்பது **வரையறுக்கப்பட்ட எனித்திங் (தனியார்) கம்பனிக்குச்** (ஒரு கம்பனி) சொந்தமான ஒரு இணையத்தளம் ஆகும். விற்பனையாளர்கள் கட்டணம் செலுத்தி தமது விளம்பரங்களை இவ்விணையத்தளத்தில் காட்சிப்படுத்த முடியும் என்பதுடன் கொள்வனவாளர்கள் இவ்விணையத்தளத்தைப் பார்வையிட்டு, விற்பனையாளர்களைத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையான பொருள்களை வாங்க முடியும். நீங்கள் இக்கம்பனியில் சமீபத்தில் இணைந்துகொண்ட ஒரு கணக்காளர் ஆவீர்கள்.

இக்கம்பனி IT அடிப்படையிலான ஒரு கம்பனியாக இருப்பதால், தகவல் தொழினுட்பத்திற்கு இணைந்த இடர்கள் காணப்படுகினறன.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

கம்பனி அதன் இடர் முகாமைத்துவச் செயன்முறையில் பயன்படுத்தக்கூடிய தகவல் தொழினுட்பத்திலுள்ள இரண்டு (02) இடர் முகாமைத்துவக் கருவிகளை (tools) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

COSO உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை வேலைச்சட்டகமானது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றின் மூன்று நோக்கங்களில் ஒன்றான "நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை" இனை அடையாளங் கண்டது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) COSO உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை வேலைச்சட்டகத்தின்படி, "நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை" இன் நோக்கத்தை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் இரண்டு (02) கூறுகளைக் (components) **குறிப்பிடுக.**

(02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

***ஏஜேபி அன்ட் கோ*** என்பது ஒரு கணக்காய்வு நிறுவனமாகும். இது, நிறுவனத்தின் தரக் கட்டுப்பாட்டுத் தேவைகளை அடைந்துகொள்ளும் பொருட்டு நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுடன் தொடர்புடைய கணக்காய்வுக் கோப்புகளை மேற்பார்வை செய்வதிலும் மீளாய்வு செய்வதிலும் ஈடுபடுத்தற் பங்காளர்களுக்கும் முகாமையாளர்களுக்கும் வழிகாட்டும் ஆவணமொன்றைத் தயாரிக்கும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

தனித்தனியான கணக்காய்வு ஈடுபடுத்தல்களின் "மேற்பார்வை" தொடர்பில், மேற்படி வழிகாட்டலில் உள்ளடக்கப்பட வேண்டிய மூன்று (03) விடயங்களை **விபரிக்குக.**

(05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட PQ கம்பனியின்** இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்த "உள்ளகக் கணக்காய்வாளர்" பணி வெற்றிடத்திற்காக நீங்கள் விண்ணப்பித்துள்ளீர்கள். பணி வெற்றிடமானது பணியின் பொறுப்புகளாக கீழ்வருவனவற்றை விபரித்திருந்தது :

*"உள்ளகக் கட்டுப்பாடுகளை வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பேணுதல்."*

இக்கம்பனியானது மேல் மாகாணத்தில் அமைந்துள்ள 11 பல்பொருள் அங்காடிக் கிளைகளைக் கொண்ட ஒரு பல்பொருள் அங்காடிச் சங்கிலியாகும். உள்ளகக் கணக்காய்வாளர் என்ற வகையில், நீங்கள் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்தில் இருப்பீர்கள்.

நேர்முகத்தேர்வில், கம்பனி பற்றிய சுருக்கமான விபரிப்பின் பின்னர், உங்களால் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த முடியுமா என்பது பற்றி, கம்பனியின் தலைவர் கேட்டுள்ளார்.

அதன் பின்னர், கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மோசடி மற்றும் வழுக்களின் இடரை அகற்றுவதற்கு கம்பனியின் கணக்காய்வாளர் என்ற வகையில் உங்களால் பணியாற்ற முடியுமா எனக் கேட்டிருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணம் தந்து, இரண்டு (02) "கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை" **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(b) கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மோசடி மற்றும் வழுக்களின் இடரை கணக்காய்வாளரால் அகற்ற முடியுமா என்பதை **ஆராய்க.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட சுராஜ் கம்பனி** என்பது உள்நாட்டுச் சந்தைக்கு ஆடைகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள ஒரு கம்பனியாகும். அங்கு 100 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் தொழிற்சாலையில் பணியாற்றுவதுடன் 5 ஊழியர்கள் (1 கணக்காளர், 2 கணக்கு நிறைவேற்றுநர்கள், 1 கணக்குகள் உதவியாளர் மற்றும் 1 காசாளர்) நிதிப் பிரிவில் பணியாற்றுகின்றனர். அனைத்துக் கொடுப்பனவுகளும் கணக்குகள் உதவியாளரால் கையாளப்படுவதுடன் அவர் சில்லறைக் காசு மிதப்பையும்கூடப் (petty cash float) பேணுகிறார். கம்பனியின் தினசரி சேகரிப்புகள், நாளாந்த செலவினங்களுக்காக நாளொன்றுக்கு ரூபா 10,000/- இனை பேணியதன் பின்னர் அந்த நாளின் இறுதியில் காசாளரால் வங்கியில் வைப்புச் செய்யப்படுகின்றன.

நிதிப் பிரிவிலுள்ள கணக்குகள் நிறைவேற்றுநர் ஒருவரால் மேலதிக நேரக் கொடுப்பனவு கணிக்கப் படுவதுடன் அது ஊழியர்களின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்படுகின்றன. இது **வரையறுக்கப்பட்ட சுராஜ் கம்பனியின்** தொழிற்சாலை முகாமையாளரால் அனுப்பப்படும் வருகைப் பதிவேட்டுத் தாள்களின் அடிப்படையில் கணிப்பிடப்படுகிறது.

எக்செல் தாள் (excel sheet) ஒன்றிற்கு தனித்தனிக் கடன்பட்டோரின் பேரேட்டு விபரங்களை ஏற்றுவதன் மூலம் கடன்பட்டோர் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. தவறவிடப்படுகின்ற அல்லது இரட்டிப்பான (duplicated) விற்பனை விலைப்பட்டியல் விபரங்கள் காரணமாக, தீர்ப்பனவுகள் செய்வதில் அடிக்கடி தகராறுகள் ஏற்படுகின்றன. கடன்பட்டோர் பேரேட்டை அணுகுவதற்கும் கடன்பட்டோர் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் கணக்குகள் நிறைவேற்றுநர் ஒருவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவர் பிற வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும்போது கணக்குகள் உதவியாளர் கடன்பட்டோர் கூற்றுக்களைத் தயாரிக்கிறார்.

ஆண்டின்போது ஒரு புதிய இருப்பு முகாமைத்துவ முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது எனினும் முறைமை எவ்வாறு தொழிற்படுகிறது என்பது பற்றிய பூரண அறிவைப் பணியாளர்கள் கொண்டிருக்காததால் பௌதிக ரீதியான இருப்பு மீதிகளுக்கும் முறைமையில் காணப்படும் இருப்புப் பதிவுகளுக்குமிடையே கணிசமானளவு வித்தியாசங்கள் காணப்படுகின்றன. மேலும், இருப்பு பற்றிய ஒரு தொகுதித் தரவுகள் பிரதான கோப்பிலிருந்து (master file) அழிந்திருந்தன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **வரையறுக்கப்பட்ட சுராஜ் கம்பனியின்** உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மூன்றை (03) **அடையாளங் காண்க.** (03 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் இனங்காணப்பட்ட ஒவ்வொரு பலவீனத்தையும் சமாளிப்பதற்கான ஒவ்வொரு பரிந்துரை வீதம் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) கம்பனியின் தகவல் முறைமைகளை வலுப்படுத்துவதற்கு **வரையறுக்கப்பட்ட சுராஜ் கம்பனியின்** முகாமையால் தாபிக்கப்படக்கூடிய இரண்டு (02) பொதுக் கட்டுப்பாடுகளை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணத்துடன் **அடையாளங் காண்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

(a) **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியானது** அதன் தற்போதைய கணக்காய்வாளரை மாற்றுவதற்கும் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** சட்டநியதிக் கணக்காய்வாளராக **RK அஸோசியேற்ஸ்** இனை நியமிப்பதற்கும் திட்டமிடுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** சட்டநியதிக் கணக்காய்வாளராக நியமனத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் **RK அஸோசியேற்ஸ்** ஆற்ற வேண்டிய இரண்டு (02) நடைமுறைகளை **விபரிக்குக.**
(04 புள்ளிகள்)

(b) **பெரேரா, சில்வா** மற்றும் **குரே** ஆகியோர் ஒரு பட்டயக் கணக்காளர் நிறுவனமான **PSC அஸோசியேற்ஸ்** இன் பங்காளர்கள் ஆவர். **PSC அஸோசியேற்ஸ்** தொடர்பான கீழ்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்க:

(1) **PSC அஸோசியேற்ஸ்** இன் கணக்காய்வுச் சேவைநாடுநர் ஒருவரின் நிதிக் கட்டுப்பாட்டாளராக **பெரேராவின்** துணைவியார் இணைந்திருக்கிறார்.

(2) **PSC அஸோசியேற்ஸ்** இனால் கணக்காய்வு செய்யப்பட்ட அலகு நம்பிக்கை (unit trust) ஒன்றில் **சில்வா** முதலீடு செய்திருக்கிறார்.

(3) அதிநவீன கணக்காய்வு முறைமை ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக, **PSC அஸோசியேற்ஸ்** இனால் கணக்காய்வு செய்யப்படுகின்ற வங்கியொன்றிடமிருந்து பெரிய தொகைப் பணத்தை (ரூபா 10 மில்லியன்) **PSC அஸோசியேற்ஸ்** கடனாகப் பெற்றுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

மேற்படி ஒவ்வொரு நிலைமையும் **PSC அஸோசியேற்ஸினால்** எவ்வாறு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதை **விபரிக்குக.**
(06 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**சண்பிளவர் பீஎல்சீ (SPLC)** தரை ஓடுகளை (tiles) விற்பனை செய்கின்ற வணிகத்தில் ஈடுபட்டுள்ளது. பட்டயக் கணக்காளர் நிறுவனமான **ஏபீசீ அன்ட் கோ நிறுவனம்** 2019 ஆம் ஆண்டிலிருந்து **SPLC** இன் கணக்காய்வாளராகச் செயற்படுவதுடன் 2024 மார்ச் 31 இல் முடிலடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுப் பணிகள் தற்போது நடைபெறுகின்றன. ஆண்டிறுதியின் பின்னர் ஆனால் கணக்காய்வை ஆரம்பிப்பதற்கு முன்னர், **ரோஸ் பீஎல்சீ** ஆனது **SPLC** ஐக் கொள்வனவு செய்திருக்கிறது.

நிறுவனத்தின் பங்காளர் சுழற்சிக் கொள்கைக்கு இணங்க, கணக்காய்வுப் பங்காளர் மாற்றப்பட்டுள்ளார். **SPLC** இன் புதிய நிறைவேற்றுத் தலைவருடனான ஆரம்பக் கூட்டத்தில், **SPLC** ஒரு புதிய இருப்பு முறைமையை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் கணக்காய்வாளர் கணக்காய்வு நடைமுறைகளை ஆற்றும்போது, புதிய முறைமையிலுள்ள இருப்புக் கட்டுப்பாட்டு முறைமையைச் சரிபார்ப்பதற்கு, கணக்காய்வாளரை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

கணக்காய்வாளர் வரிக்கு முன்னரான இலாபத்தின் அடிப்படையில் பொருண்மை (materiality) மட்டத்தை தீர்மானித்திருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 1,250,000/- ஆகும்.

கணக்காய்வின்போது கீழ்வரும் பிறழ்கூற்றுக்களை கணக்காய்வு அணி இனங்கண்டிருந்தது :

(1) முறைமையால் தயாரிக்கப்பட்ட இருப்புகள் பற்றிய அறிக்கைக்கும் பௌதிக ரீதியில் எண்ணிக் கணக்கிடப்பட்ட அறிக்கைக்குமிடையே ரூபா 997,000/- வித்தியாசம் காணப்பட்டது. முறைமையின் அறிக்கையில் காணப்பட்ட பெறுமதி, பௌதிக ரீதியான இருப்பு அறிக்கையில் இருந்த பெறுமதியை விட அதிகமானதாக இருந்தது. முறைமையிலிருந்த இருப்பின் பெறுமதி நிதிக் கூற்றுக்களுடன் தொடுக்கப்பட்டிருந்தது.

(2) விற்பனை விலைப் பட்டியல்களின் மாதிரிப் பரிசோதனையானது, 7 விலைப்பட்டியல்களில் ரூபா 334,000/- விதிவிலக்குகளை (exceptions) வெளிப்படுத்தியது.

(3) தேய்மான வீதத்தின் தவறான பிரயோகம் கண்டறியப்பட்டிருந்ததுடன் அதன் தாக்கம் மதிப்பிடப்பட்டது. இதில், ரூபா 367,000/- ஆனது முன்னைய ஆண்டுகளுடன் தொடர்புடையதாகக் காணப்பட்டதுடன் ரூபா 24,000/- ஆனது நடப்பு ஆண்டுடன் தொடர்புடையதாக இருந்தது. இது தொடர்பில் அவசியமான சீராக்கங்களைச் செய்து, நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த முகாமை ஒப்புக்கொண்டது.

(4) ஈடுபடுத்தற் பங்காளர் மாற்றப்பட்டிருந்த போதிலும், இந்தக் கணக்காய்வை மீண்டுவரும் கணக்காய்வாகக் கருதி, அதற்கான ஈடுபடுத்தற் கடிதத்தைக் கணக்காய்வு முகாமையாளர் தயாரித்திருக்கவில்லை. எவ்வாறாயினும், புதிய கணக்காய்வுப் பங்காளர், பங்காளரின் மாற்றம் காரணமாக, மீண்டுவரும் கணக்காய்வுக்கும்கூட ஈடுபடுத்தற் கடிதம் அனுப்புவது அவசியமானது என்ற கருத்தைக் கொண்டுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலொன்றின் மூன்று (03) கூறுகளை (elements) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) ஈடுபடுத்தற் கடிதத்தின் விதிமுறைகள் (terms) திருத்தப்படக்கூடிய நான்கு (04) நிலைமைகளைக் (conditions) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) **SPLC** இன் முகாமையிடம் விசாரிக்கப்பட வேண்டிய விடயங்களின் பட்டியலில் உள்ளடக்கப்பட வேண்டிய ஐந்து (05) விடயங்களை (matters) **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

(d) கணக்காய்வுக்கு, பொருண்மை மதிப்பீடானது ஏன் முக்கியமானது என்பதற்கான நான்கு (04) காரணங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(e) ஆளுகை பாரப்படுத்தப்பட்டோருடன் (TCWG) தொடர்பு கொள்வதற்கு முன்னர், கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட மேற்படி பிறழ்கூற்றுக்களை எவ்வாறு மதிப்பிடுவது என்பதை **விபரிக்குக.**

(06 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

**நியூ வேல்ட் பீஎல்சீ (NW)** ஆனது கொழும்பு – 02 இல் அமைந்துள்ள சொகுசு வணிக வளாகமொன்றைச் சொந்தமாக இயக்குகிறது. இவ்வணிகத்தின் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு நடைபெறுகிறது. இக்கம்பனியானது வணிக வளாகத்தின் நிருமாணத்திற்காக காணியை அடமானம் வைத்து, பெருந்தொகை வங்கிக் கடனொன்றைப் பெற்று, வணிக வளாகத்தைக் கட்டியிருந்தது.

நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக, ஆண்டின் காலப்பகுதியிலும் முன்னைய ஆண்டிலும் **NW** ஆனது செயற்பாட்டு நட்டங்களைச் சந்தித்திருந்தது. இதன் விளைவாக, **NW** இன் ஆறு (06) கடன் தவணைக் கட்டணங்கள் நிலுவையாக இருக்கின்றன. கணக்காய்வின்போது, கணக்காய்வு அணியின்

கனிஷ்ட அணி உறுப்பினரான **ரங்கா** என்பவருக்கு கடன் சரிபார்ப்புப் பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது. **NW** ஆனது கடன் உடன்படிக்கைகளை மீறியுள்ளது எனவும், காணி மற்றும் கட்டடத்தை கையகப்படுத்துவதன் மூலம் கடனை வசூலிப்பதற்கான சட்ட நடவடிக்கையின் முதற்படியாக கோரிக்கைக் கடிதமொன்றை (letter of demand) வங்கி அனுப்பியிருப்பதையும் வங்கியுடனான கடிதப்போக்குவரத்து காட்டுகிறது. கடன் உடன்படிக்கையானது கடன் - உரிமையாண்மை விகிதம் (debt to equity ratio) உள்ளிட்ட குறித்த நிதி விகிதங்களைப் பேணுவதற்கு **NW** இனைத் தேவைப்படுத்தியிருந்தது. எவ்வாறாயினும், இது தொடர்பில் முகாமை எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை என்பதுடன் அது தொடர்பில் கணக்காய்வாளருக்குத் தெரிவித்திருக்கவில்லை. கடன் நிலுவைத் தொகையை நேரடியாக உறுதிப்படுத்து மாறு **NW** இடம் **ரங்கா** கோரியதைத் தவிர, இதற்கான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுவதற்கு **ரங்கா** வேறு எந்த கணக்காய்வு நடைமுறைகளையும் பின்பற்றியிருக்கவில்லை.

பொருண்மை மட்டம் ரூபா 3,456,000/- ஆனது வரிக்கு முன்னரான இலாபத்தின் (PBT) அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. மின் வெட்டுகளின்போது மின்சாரத்தை வழங்குவதற்காக ஆண்டின் காலப்பகுதியில் உயர்-தொழினுட்ப மின்பிறப்பாக்கியொன்றை **NW** இறக்குமதி செய்திருந்தது. தற்போதைய இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக, மின்பிறப்பாக்கியொன்றை இறக்குமதி செய்வதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்குச் செலுத்தப்பட்ட ரூபா 5 மில்லியனானது ஒரு விசேட கட்டணமாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சொத்தொன்றாக மூலதனமாக்கப்படக்கூடிய இந்தத் தொகையை நியாயப்படுத்துவதற்கு வங்கிக் கூற்றில் காட்டப்படும் காசோலை மூலமான கொடுப்பனவுகள் தவிர்ந்த, வேறு எந்தத் துணை ஆவணங்களையும் **NW** இனால் வழங்க முடியவில்லை. இதனால், அந்தத் தொகை செலவினம் ஒன்றாகக் கருதப்பட வேண்டும் என கணக்காய்வாளர் பரிந்துரைத்துள்ளார். எனினும், **NW** அந்தச் சீராக்கத்துடன் இணங்கவில்லை என்பதுடன், விசேட கட்டணம் என்பது மூலதனச் செலவினம் என்று முகாமைப் பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கு இணங்கியது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பௌதிக ரீதியான சரிபார்ப்பின்போது, ஐந்து (5) காற்று பதனமாக்கி இயந்திரங்கள் (air conditioning machines) பௌதிக ரீதியில் காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இது பற்றி விசாரித்தபோது இயந்திரங்களின் பராமரிப்புக்காக ஒப்பந்தஞ் செய்யப்பட்ட மூன்றாம் தரப்பினரால் வழக்கமான சுத்திகரிப்பு வேலைகளுக்காக அந்த இயந்திரங்கள் எடுத்துச் செல்லப்பட்டதாக வளாகத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர் வாய்மொழியாக உறுதிப்படுத்தியிருந்தார். மேலும், இரண்டு பிரதான முகாமைத்துவ அலுவலர்கள் கம்பனியிலிருந்து சமீபத்தில் விலகியிருந்ததுடன் அந்தப் பதவி வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படவில்லை.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) மேற்படி விவரணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்வரும் கணக்காய்வுச் சான்றுகளின் நம்பகத்தன்மையை **மதிப்பிடுக** :

- வங்கியிடமிருந்து கடன் பற்றிய நேரடி உறுதிப்படுத்தலைப் பெறுதல்.
- விசேட கட்டணத்தை மூலதனச் செலவினம் ஒன்றாகக் கருதுவதற்கான கணக்காய்வுச் சான்றாக முகாமைப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்ளல்.
- பாதுகாப்பு உத்தியோகத்தரின் வாய்மொழி உறுதிப்படுத்தல். (06 புள்ளிகள்)

(b) கடன் பெறுகைகள் பற்றிய கணக்காய்வுச் சான்றைச் சேகரிப்பதில் கடன் உறுதிப்படுத்தல் நடைமுறையின் பொருத்தப்பாட்டுத் தன்மையை **ஆராய்க.** (04 புள்ளிகள்)

(c) கணக்காய்வு அபிப்பிராயத்தில் 'விசேட கட்டணத்தின்' தாக்கத்தை **மதிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(d) கணக்காய்வாளரின் அறிக்கையில் வலியுறுத்தல் விடயப் பந்தியை உள்ளடக்க கணக்காய்வாளர் கருத்திற்கொள்ளும் இரண்டு (02) சூழ்நிலைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(e) **NW** இன் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு பற்றிய சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய ஐந்து (05) நிகழ்வுகள் மற்றும் நிலைமைகளை (events and conditions) **அடையாளங் காண்க.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |